# 26-04-2024 செய்தி

## 3-வது முறையாக விண்வெளிக்கு செல்லும் சுனிதா வில்லியம்ஸ்

- இந்திய வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவில் பணியாற்றி வருகிறார்.
- போயிங் ஸ்டார் லைனர் விண்கல திட்டத்தில் அவர் விமானியாக பயிற்சி பெற்று வருகிறார்.
- இதனையடுத்து புதிய விண்வெளி ஆராய்ச்சி திட்ட பயணத்திற்கான விண்வெளி வீரர்கள் பெயர் பட்டியலை நாசா வெளியிட்டுள்ளது.
- அதில் சுனிதா வில்லியம்ஸ் இடம் பெற்றுள்ளார். இதனையடுத்து 3-வது முறையாக சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிக்கு செல்ல உள்ளார். வரும் மே மாதம் 6-ந் தேதி கேப் கார்னிவல் ஏவுதளத்தில் இருந்து ஏவப்படும் போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏறி சென்று விண்வெளியில் ஒருவாரம் தங்கி ஆராய்ச்சி செய்ய உள்ளார்.
- இவருடன் புட்ச்வில்மோர் என்னும் விண்வெளி வீரரும் இந்த திட்டத்திற்காக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளார்.

## செரிலாக்கில் கூடுதல் சர்க்கரை இடுபொருள் மாதிரிகளைச் சேகரிக்கும் எஃப்எஸ்எஸ்ஏஐ

- சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சர்வதேச குழந்தைகள் உணவுப்பொருள் கண்காணிப்பு அமைப்பு (ஐபிஎஃப்ஏஎன்) (என்ஜிஓ அண்மையில் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது.
- அதில், 'நெஸ்லே' நிறுவனம் சார்பில் ஐரோப்பிய சந்தைகளில் விற்பனை செய்யப்படும் 'செரிலாக்' உணவுப் பொருளுடன் ஒப்பிடும்போது, இந்தியா உள்பட குறைந்த பொருளாதார வளர்ச்சி கொண்ட தெற்காசிய நாடுகளில் விற்பனை செய்யப்படும் 'செரிலாக்' உணவில் கூடுதல் சர்க்கரை இடுபொருள்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
- அதனடிப்படையில் 'செரிலாக்' உணவின் இடுபொருள்கள் குறித்த ஆய்வை மேற்கொள்ளுமாறு எஃப் எஸ்எஸ்ஏஐ-க்கு மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சகம் அறிவுறுத்தியது.
- இந்த ஆய்வுக்காக மாதிரிகளை தற்போது எஃப்எஸ்எஸ்ஏஐ சேகரித்து வருகிறது.

## ஏழைகளின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட வேண்டும்

- 2009இல் நிறைவேற்றப்பட்ட கல்வி உரிமைச் சட்டத்தின்படி (ஆர்டிஇ) தனியார் பள்ளிகளில் 25% இடங்கள், சமூகரீதியிலும் பொருளாதாரரீதியிலும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- கட்டணம் செலுத்த இயலாததால் யாருக்கும் கல்வி மறுக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே கல்வியை அடிப்படை உரிமையாக்கிய இச்சட்டத்தில், இத்தகைய பிரிவு இணைக்கப்பட்டது.
- மகாராஷ்டிர அரசு இந்த ஆண்டு ஆர்டிஇ சட்டத்துக்கான மாநில விதிகளில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு அருகில் அமைந்துள்ள தனியார் பள்ளிகள் ஏழை மாணவர்களுக்கு 25% இடங்களை ஒதுக்க வேண்டியதில்லை என்னும் திருத்தத்தை மேற்கொண்டுள்ளது.
- 2018இல் கர்நாடகத்தில் இதே போன்ற சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது.
- அதற்கு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## மத்திய அரசின் புதிய பாரத எழுத்தறிவு திட்டம்

- நாடு முழுவதும் கல்வி கற்காத 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தன்னார்வலர்களை கொண்டு அடிப்படை எழுத்தறிவு பயிற்றுவிப்பதற்காக மத்திய அரசால் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ் 2027-ம் ஆண்டுக்குள் 5 கோடி பேருக்கு கல்வி கற்பிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகத்தின் மூலம் இந்த திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 10 லட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவு கல்வி வழங்கப்பட்டது.
- தொடர்ந்து இந்தாண்டு பாரத எழுத்தறிவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தற்போது வெளியாகியுள்ளன.
- பிற மாநிலத்தவர்கள், புலம் பெயர் தொழிலாளர்கள் மற்றும் மலைவாழ் பகுதிகளில் யாரும் விடுபடுதல் கூடாது. அதன்படி எழுத, படிக்க தெரியாதவர்களை கண்டறிதல், தன்னார்வலர்கள் நியமனம் உட்பட பணிகளை முடிக்க வேண்டும்.

## திரவ நைட்ரஜன் பயன்படுத்த தமிழகத்தில் தடை

- பிஸ்கட், ஐஸ்கிரீம், வேபர் பிஸ்கட் போன்ற உணவு பொருட்களுடன் திரவ நைட்ரஜனை நேரடியாக கலந்து விற்பனை செய்யக்கூடாது என்று உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் அறிவித்துள்ளார்.
- உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகள் சட்டத்தின்படி திரவு நைட்ரஜன் ஒரு செயலாக்க உதவியாக, உறைதல் தன்மையுள்ள பொருட்களான பால் சார்ந்த இனிப்பு வகைகள் மற்றும் ஐஸ்கிரீம் போன்ற உணவுபொருட்களில் உறைதல் பணியினை மேற்கொள்ள மட்டுமே உதவுகிறது.
- மேலும் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஒழுங்கு முறை சட்டத்தின்படி திரவ நைட்ரஜனை பேக்கிங் எரி வாயுவாகவும், உறைபனியாகவும் மட்டுமே பயன்படுத்த முடியும்.

**நேரடி கலப்பு கூடாது**

- எனவே உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டப்படி பிஸ்கட், ஐஸ்கிரீம், வேபர் பிஸ்கட் போன்ற உணவு பொருட்களுடன் திரவ நைட்ரஜனை நேரடியாக கலந்து விற்பனை செய்யக்கூடாது.
- மீறி இவ்வாறு விற்பனை செய்யும் உணவு வணிகர்கள் மீது உணவு பாதுகாப்பு துறையை சேர்ந்த நியமன அலுவலர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.